விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 04 செவ்வாய்க்கிழமை (18.06.2002) தொலைபேசி 3378 ஒலி 181




# சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசின் ஆர்வம் குறைந்து செல்கிறது

## சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்கு பேட்டி



(லண்டன்)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தபோது அரசிடம் காணப்பட்ட உத்வேகம் தற்போது குறைவடைந்துள்ளது. இதனால் சமாதான முயற்சிகள் மந்த வேகத்திலேயே நகர்வடைகின்றது.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் லண்டன் பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டி இங்கு அதே வடிவில் தரப்படுகின்றது.

கேள்வி:- அமைதி முயற்சிகளிலே இப்பொழுது ஒரு தொய்வு ஏற்பட்டது போல தோற்மளிக்கிறது. இதனால் மக்களிடையே ஒரு அவநம்பிக்கை. அமைதி நீடிக்குமா எனும் எண்ணம் ஏற்பட்டு இருக்கிறது. இவ் அமைதி முயற்சியின் நிலமை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- உங்களுடைய அபிப்பிராயம் சரி ஆரம்பத்திலே யுத்த நிறுத்த உடன்படிக்கை கொண்டு வந்த காலப்பகுதியிலேயே மிகவும் உற்சாகமாவும் உத்வேகத்தோடும் நகர்வுகள் இருந்தது. தற்பொழுது இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஒரு மந்த நிலை ஏற்பட்டிருப்பது உண்மை. நாம் அதனை நோர்வே அரசுக் கூடாகவும் கண்காணிப்புக்குழுவுக்கு ஊடாகவும் உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட காலவரையறைகுள் நிறைவேற்ற வேண்டும் என்பதனை வலியுறுத்தி வருகின்றோம். நிச்சயமாக எமது மக்கள் மத்தியில் தற்பொழுது யுத்த நிறுத்த உடன்படிக்கை மந்தகதியிலான நகர்வு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பது உண்மை.

(02ம் பக்கம் பார்க்க)

### காவலூரில் புலிகள்படையினர் வாக்குவாதம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் சென்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஊர்காவற்றுறையில் வைத்து அங்கு திரண்டிருந்த மக்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படத்தை விநியோகித்த போது கடற்படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

இவ்வாக்குவாதத்தை அடுத்து வரிப்புலிச்சீருடையுடன் கூடிய பிரபாகரனின் உருவப்படத்தை மக்களுக்கு விநியோகிக்க கடற்படையினர் புலிகளுக்குத் தடை விதித்தனர். இதனை அடுத்து விடுதலைப் புலிகள் மத்தியில் சற்று அதிருப்தி நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(வ-75)

### புதிய எம்பியை நியமிக்கும் விவகாரம்

## தமிழ்ச்செல்வனிடம் சங்கரி மூன்று மணிநேரப்பேச்சு

(வவுனியா)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரத்தின் மறைவினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துவிட்டு வி.ஆனந்த சங்கரி எம்.பி நேற்றுக் கொழும்பு திரும்பியுள்ளார். நேற்றுச் சுமார் 3மணித்தியாலங்கள் இடம்பெற்ற பேச்சுக்களில். அமரர் சிவசிதம்பரத்தின் இடத்திற்கு ஒருவரை நியமிப்பது தொடர்பாகவே பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனந்தசங்கரி கொழும்பு திரும்பும் வழியில் வவுனியாவில் கூட்டணியின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதேவேளை வன்னித்தகவல்களின்படி திருகோணமலையைச் சேர்ந்த எஸ்.துரைரத்தினசிங்கத்தின் பெயர் பிரஸ்தாபிக்கப்படுவதாகவும்

(08ம் பக்கம் பார்க்க)

# 12 வருடங்களின் பின்னர் புலிகள் தீவகம் சென்றனர்

## மக்கள் கூடி நின்று மகத்தான வரவேற்பு

(ஊர்காவற்துறை)

**பன்னிரண்டு வருடகால இடைவெளிக்குப்பின் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நேற்றுத் தீவகம் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கு தீவக மக்களினால் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் வருகையை ஒட்டி தீவுப்பகுதி எங்கணும் சிவப்பு மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது.**

தீவகப் பகுதியில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் 7பெண் போராளிகள் உட்பட 35போராளிகள் நேற்றுக்காலை தீவ

தளபதி நிகால் சந்தகிரி வரவேற்றார். இதனை அடுத்து அங்கு குழுமி நின்றிருந்த மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உற்சாகமாக வரவேற்

இதனைத் தொடர்ந்து வங்களாவடி, தம்பாட்டியூடாக ஊர்காவற்றுறைக்குச் சென்றனர்.

மெலிஞ்சி முனைக்கிராமத்தைச் சென்றடைந்தபின் அங்கு பொது

## மணிக்கூட்டுக் கோபுர வீதி மக்கள் பாவனைக்கு விடப்படும்

## மக்கள் பாவனைக்கு விடப்படும்

### இராணுவ வேலி அகற்றப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ் மணிக்கூட்டுக் கோபுர வீதி பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்படப்படுவதற்கு முன்னோடி நடவடிக்கையாக நேற்றுக்காலை அங்கு போடப்பட்டிருந்த இராணுவக் காவலரண் அகற்றப்பட்டு இராணுவத்தினரால் துப்புரவு செய்யப்பட்டது.

நேற்றுக்காலை முதல் மாலை வரை யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர்கள் மணிக்கூட்டுக்கோபுர வீதியையும் வடிகால்களையும் துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர். அவ்வீதியில் நின்றிருந்த கட்டாக்காலி ஆடுகளை மாநகரசபை ஊழியர்கள் பிடித்துச் சென்றனர்.

இவ்வேலைகள் அனைத்தும் யாழ் மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையனின் நேரடிப்பார்வையில் இடம்பெற்றது.

(08ம் பக்கம் பார்க்க)

களின் 7பெண் போராளிகள் உட்பட 35போராளிகள் நேற்றுக்காலை தீவகம் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான இளம்பரிதி, பாப்பா, தீவகப் பொறுப்பாளர் செம்மணன், நீதித்துறைப்பொறுப்பாளர் பரா ஆகியோரைக் கடற்படையின் கட்டளைத்

புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உற்சாகமாக வரவேற்றார்கள்.

தீவுப் பகுதிக்குச் சென்ற புலிப் போராளிகள் முதலில் சாட்டிக்குச் சென்று அங்குள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினர்.

மெலிஞ்சி முனைக்கிராமத்தைச் சென்றடைந்தபின் அங்கு பொது மக்களுடன் கலந்துயையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இக்கலந்துரையாடல் நிகழ்வுகளையடுத்து புளியங்கூடல் சந்தியில் உள்ள மாவீரர் நினைவுத் தூபிக்கு

(08ம் பக்கம் பார்க்க)

### மீளக்குடியமர்த்தக் கோரி

## வலி வடக்கு மக்கள் நாளை மறியலும் – பேரணியும் நடத்துவர்

(ஏழாலை)

வலிவடக்கு பிரதேசத்தில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டுமென்று கோரி, நாளை வலிவடக்கு பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டமும், யாழ் அரச செயலகத்தை நோக்கிய மக்கள் பேரணியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வலிவடக்கு புனர்வாழ்வுக் கழகமும் விவசாயிகள் சம்மேளனமும் இணைந்து நடத்த திட்டமிட்டுள்ள இச் சாத்வீகப் போராட்டத்தில், வலி வடக்குப் பகுதிகளிலுள்ள பொது அமைப்புக்கள், சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை ஒரே அணியில் திரண்டு ஆதரவை வெளிப்படுத்துமாறும் பங்கு பற்றுமாறும் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலிவடக்கு பிரதேச செயலகம் முன்பாக காலை 8மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை மறியற் போராட்டம் நடைபெறுமென்றும் அதனைத்

(08ம் பக்கம் பார்க்க)

## இயந்திரப்படகைப் பயன்படுத்தவும் ஆழ்கடலில் மீன்பிடிக்கவும் அனுமதி

### கடற்றொழில் அமைச்சரின் அ.அட்டை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கடலில் இருபத்தினான்கு மணிநேரமும் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கான அனுமதி உறுதி செய்யப்பட்டுள்ள அதே வேளை பாஸ் நடைமுறைக்கு மாறாக கடற்றொழில் அமைச்சினால் வழங்கப்படவிருக்கும் அடையாள அட்டையை அமுல்படுத்துவதென நேற்று மாலை யாழ் செயலகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு கோரி யாழ் செயலகத்தின் முன்பாக சுமார் நான்கு நாட்களாக மறியற் போராட்டத்தை கடற்றொழிலாளர்கள் நடத்தியதை அடுத்து மீன்பிடித் தொழிலாளர்கள் சங்கத் தலைவர், பொதுமுகாமையாளர் ஆகியோர் கொழும்பு சென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைச் சந்தித்திருந்தனர்.

இதனை அடுத்து நேற்று யாழ் செயலகத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டில பதில் கடற்

(08ம் பக்கம் பார்க்க)

## தீவகம் சென்ற புலிகள் மீது அல்லைப்பிட்டியில் சோதனை

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிக்கு அரசியல் பணிக்குச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிப்பிரதிநிதிகள் அல்லைப்பிட்டி இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்துச் சோதிக்கப்பட்டனர்.

இதனை அடுத்து அங்கு சற்று குழப்ப நிலை ஏற்பட்ட போதும் கண்காணிப்புக்குழுவினர் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் தீவகம் சென்றபோது இடுப்புப்பட்டி இன்றி செல்லுமாறு கடற்படையினர் பணித்திருந்தனர். (ம)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### விற்பனையாகிறது

எமதுவெளியீடுகள் (ஸ்ரீலங்கா புத்தகசாலை) தென்றல்பப்ளிகேசன் வெளியீடுகள் (இ. க. சிவஞானசுந்தரம்) வியாபாரிகளுக்கும் மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கும்20%கழிவுவழங்கப்படும். தொடர்பு கட்கு; ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, k. k. s வீதி, யாழ்ப்பாணம். (சி-4433)

### விற்பனையாகிறது

பிரயோக உயிரியல்(Unit-8) -300-/- (S P. நாகநாதன்) பொருளியல் அலகுரீதியான வினாத்தொகுப்பு -125/- (1997-2002) க. கலாகரன் எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும் விற்பனையாளர் ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, k. k. s. வீதி,யாழ்ப்பாணம். (சி-4434)

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக் கட்டுரைகள் 50

மொழிவிருத்தி, சிறுவர் பாடல். சாயி கல்வி வட்ட வெளியீடு எழுதியவர் கே.வி. குணசேகரம். விபரங்கட்கு: ஹரிஹரணன் பிரின்ரேர்ஸ், 224, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். போன் 2717 (5443)


# ராணுவகட்டுப்பாட்டில் மையவாடிகள்; ஜனாஸா அடக்கம்செய்ய இடமில்லை

## அமைச்சரிடம் முஸ்லிம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களின் எந்தவொரு அடிப்படைத் தேவைகளும் செய்து முடிக்கப்படாத சூழ்நிலையில் யாராவது ஒருவர் இறந்துபோனால் அவரதுஜனாஸாவை அடக்கம்செய்வதற்கு ஒரு மையவாடிகூடஇல்லை என்று முன்னாள் யாழ்முஸ்லிம் சமாதானசபைத்தலைவர்எம்.எ.சி சனூன் யாழ்வந்த ஊடகத்துறைஅமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காரிடம் சுட்டிக் காட்டினார்.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ்பாக்கீர்மாக்கார் நேற்றுமுன்தினம் நாவாந்துறையில் உள்ளபெரியபள்ளி வாசலில் யாழ்வந்துள்ள முஸ்லிம்மக்களைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

நாவாந்துறை பள்ளிவாசலில் மொபீன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஊடகத்துறை அமைச்சருடன் பாராளுமன்றவிவகாரஅமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஊடகத்துறைஅமைச்சின் செயலாளர் குமார்அமரசிங்கா, பிரதமரின் விசேட ஆலோசகரும் முன்னாள் எம்.பியுமான அலிசார்மௌலானா, அமைச்சின் உயரதிகாரிகள், யாழ் அரசஅதிபர் க.சண்முகநாதன், யாழ்மாவட்ட எம்.பி எம்.கே.சிவாஜிலிங்கம் உட்படபலர்கலந்து கொண்டனர்.

எம்.எ.சி.சனூன் தொடர்ந்து உரையாற்றுகையில் முஸ்லிம்மக்களின் மையவாடிகள் எல்லாம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் மக்கள் செல்லமுடியாத நிலையில் உள்ளன. இந்நிலையில்யாராவது ஒருமுஸ்லிம் இறந்துவிட்டால் அந்தமுஸ்லிமின் ஜனாஸாவை யாழ்ப்பாணத்தில் தெருவோரத்தில் அல்லது வவுனியாவுக்குக் கொண்டு செல்லக்கூடிய துர்ப்பாக்கிய நிலைஏற்படும் என்றுகூறினார்.

அமைச்சர்களும் அவர்களது குழுவினரும் சேதமுற்ற முஸ்லிம் பகுதிகளையும் சுற்றிப் பார்த்தனர். (ம)

## இன்றைய போட்டி

(கோண்டாவில்)

இலங்கை வங்கி வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று 4.30மணிக்கு நடைபெறும் போட்டியில் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாண பல்கலைக்கழகஅணி மோதவுள்ளது. (வ- 5)

### சமாதானத்தை

ஏனெனில்கடந்தகாலங்களில் உடன்படிக்கைகள் இணக்கப்பாடுகள் எதுவுமே நிறைவேறாத வரலாறுகள் மக்கள் அறிந்தவை.

இந்நிலையில் இவ்யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப் படுத்துவதன் மூலம் தான் எதிர்காலத்தில் எமதுசமாதானமுயற்சிகள் உறுதியாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்கின்ற நம்பிக்கைமுக்கியமான விடயமாகும்.

இலங்கைஅரசாங்கம் இருதரப்பும் ஏற்றுக்கொண்ட விடயங்களை விரைவாக குறித்தகாலத்தில் நடைமுறைப் படுத்துவதற்காக முயற்சிஎடுக்கவேண்டும் என்பது தான்எமதுஎதிர்பார்ப்பு.

கேள்வி-

கடந்தகால அனுபவப்படி பார்க்கும் போதுசிலர்குறிப்பிடுகிறார்கள் இந்தமாதிரியான பேச்சுவார்த்தைகளுக்கு முடிவுஏற்படாது விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்துஎன்று இம்முறை விடுதலைப்புலிகளின் தரப்பிலிருந்து சமாதானமுயற்சிகளுக்கு ஊறு வராது என்றுநீங்கள் உறுதியாகச் சொல்லமுடியுமா?

பதில்-

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளால் சமாதான முயற்சிகள் குழப்பப்பட்டது சீர்குலைக்கப்பட்டது என்பது தவறான கருத்து. நிச்சயமாக எந்தவொரு காலகட்டத்திலும் எமதுதலைவர் சமாதானமுயற்சிகளுக்கு உறுதியாக தனது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும்செலுத்தியிருக்கின்றார்.

கடந்தகாலங்களில் சமாதானமுயற்சிகள் கண்காணிப்பு, நடுநிலைமை அற்றசூழ்நிலையில்நடைபெற்றது. அரசாங்கம்தனது அதிகாரத்தையும் தனதுவாய்ப்புக்களையும் வைத்துக்கொண்டு தவறானபரப்புரைகளை விடுதலைப்புலிகள் மீதுசாட்டியிருந்தது- அதனை உலகசமூகமும் ஓரளவு நம்பியது உண்மை.

ஆனால் இந்ததடவைஅதற்கான சாத்தியப்பாடுகள் குறைவு.

ஏனெனில்ஒருசர்வதேசஅனுசரணையோடுதான் இச்சமாதான முயற்சிகள்முன்னெடுக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இந்தத்தடவை இச்சமாதான முயற்சிகளுக்கு யார் எதிராக நிற்கின்றார்கள். யார் ஒத்துழைக்கின்றார்கள் என்பது வெளிப்படையாக தெரியவரும் சூழல் இருக்கின்றது. உண்மை நிச்சயமாக இம்முறை வெளிப்படையாகத் தெரியும்.

ஆகவே கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் புலிகள் மீது கூறிய தவறான குற்றச்சாட்டுக்கள் இந்த முறை எடுபடாது; இந்த முறை உண்மையிலேயே நேர்மையாகசமாதான முயற்சிகளுக்கு யார் உழைக்கின்றார்கள் என்பதை உலக சமூகம் நிச்சயமாக அறியக் கூடிய வாய்ப்பு உண்டு.

கேள்வி:

மக்கள் அனைவரும் இப்பொழுது தாய்லாந்திலே நடக்க இருக்கும் அமைதிப் பேச்சுக்கள் குறித்து கருத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். இந்த நிலையில் திகதியை நிர்ணயிப்பதில் இந்தத் தாமதம் ஏன்?

பதில்:

இந்தத்தாமதம் அரசாங்கத்தின் பக்கம் தான் இருக்கிறது. எமது தரப்பில் இல்லை. ஏனெனில் நாங்கள் ஏற்கனவே உடன்பாடு கண்டிருக்கின்றோம். இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னால் இவ்யுத்தநிறுத்தஉடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்தி, மக்கள் மனதில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். அத்தோடு எமது மக்கள் மீது இருந்த நெருக்குவாரங்கள் நீங்கி ஒரு இயல்பு நிலை தோன்ற வேண்டும் என்பது உடன்படிக்கையில் உடன்பாடு காணப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இவ்யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைக்கு கொண்டுவருவது மிகவும் முக்கியமான அம்சம்.

எனவே நாம் உடன்பாடு கண்டு கைச்சாத்திட்ட உடன்படிக்கையை நிறைவாக்குகின்ற போதுதான் மக்கள் மனதில் சமாதான முயற்சிக்கான நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்.

உடன்பாடு கண்ட விடயங்கள்சரியாகநடைமுறைக்கு வராமல் நாம் பேசுவதில் பயன் இல்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உறுதியாக நடைமுறைப் படுத்துவதும், அடுத்தகட்டமாக விடுதலைப் புலிகள் மீது இருக்கின்ற தடை நீக்கப்படுவதும் அவசியமானது.

தடைநீக்கப்பட்டு விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக சம அந்தஸ்தோடு, பேசுவதற்கான வாய்ப்பை இலங்கை அரசாங்கம் தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பதிலாக பேச்சுக்கான காலத்தை குறிப்பது விடுதலைப்புலிகளின் பக்கத்தில் இல்லை. இதனை நிர்ணயிப்பது இலங்கை அரசாங்கத்தின் பக்கத்திலேயே இருக்கின்றது.

கேள்வி-

அரசாங்கத்துக்காக காத்திராமல் நீங்கள் ஒருதிகதியை குறிப்பிட்டு ஐயாநாங்கள் பேசத்தயாராக இருக்கின்றோம் என்றுசொன்னால் அந்தப் பத்துநாட்களுக்குள் தடையை அகற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டால் அதுஒருபெரிய முன்னேற்றம். அந்தமுன்னேற்றம் ஏற்படுமென்று நீங்கள்கருதுகின்றீர்களா?

பதில்-

பேச்சுவார்த்தை என்பதற்கு முன்னால் யுத்தநிறுதத்திற்குமுதல் நாங்கள் ஒரு உடன்படிக்கையை நோர்வே அரசின் அனுசரணையோடு செய்திருக்கின்றோம். அவ் உடன்படிக்கை எவ்வளவு தூரம் நிறைவாக இருதரப்பாலும் விசுவாசமாக நடைமுறைப் படுத்தப்படுகிறதோ அதன் அடிப்படையில் தான் எதிர்கால நடவடிக்கைகள் தங்கியிருக்கின்றது.

இந்நிலையில் நாம் உடன்பாடு கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாது அடுத்தகட்டப் பேச்சுக்களைப் பேசி உடன்பாடு காணுவதென்பது பொருத்தமற்ற விடயம்.

அடுத்தகட்டப் பேச்சுக்களில்கூட இதனைப்பற்றிக் கதைப்பது அர்த்தமற்றது. (இ)

## இராசி பலன்

18- 06- 2002
(ஆனி, 4 செவ்வாய்)
அட்டமி பி. ப. 4. 50வரை
உத்தரம் மாலை 6. 25வரை
இராகு காலம் 2. 53- 4. 23
நல்ல நேரம் 10. 23- 11. 53

**மேடம்**
நினைத்தகாரியம்கைகூடும், பணவருகை, கூட்டுமுயற்சி, நண்பர்கள் சந்திப்பு.

**இடபம்**
தனலாபம், உறவினர் சந்திப்பு, கல்விச்சிறப்பு, பிதா சிந்தை.

**மிதுனம்**
நல்லமுயற்சி. கலந்துரையாடல், போசனசுகம், தெய்வ தரிசனம்.

**கடகம்**
உறவினர் சந்திப்பு, சென்ற இடத்தில் சிறப்பு, மனக்கிலேசம், தனலாபம்.

**சிங்கம்**
தட்டுப்பாடு, வீண்விரயம், எடுத்த காரியம்நிறைவேறும், சயனசுகம்.

**கன்னி**
திடீர் பயணம், சத்துரு ஜெயம், மனக்கட்டுப்பாடு, கற்பனைமிகுதி.

**துலாம்**
மாதர்சிந்தை, புதிய பொருள் வருகை, முயற்சி பலிதம், உடல்வியாதி.

**விருச்சிகம்**
உணர்ச்சி வசப்படல், செல்வாக்கு குறைவு, நித்திரைக் குழப்பம், போசனசுகம்.

**தனுசு**
கூட்டுமுயற்சி, ஆரோக்கியம் குறைவு, காரிய வெற்றி, பணவரவு.

**மகரம்**
காரிய அலைச்சல், குடும்ப சுகம், தொழில் நன்மை, சுவாரஸ்யம்.

**கும்பம்**
நினைத்தகாரியம் கைகூடும் ரோகபயம், உடல்வியாதி.

**மீனம்**
அதிக பிரயாசை, அந்நியர் உதவி, காரியத் தடங்கல், மனச்சஞ்சலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## சிலப்பதிகார ஆய்வரங்கில் தமிழக அறிஞர்கள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள அமைச்சு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 24ஆம் திகதி திங்கட்கிழமைவரை இடம்பெறவுள்ள சிலப்பதிகார ஆய்வரங்கில் தமிழக அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

தமிழ்நாடு தொல்லியற்றுறை கல்வெட்டாய்வாளர் பேராசிரியர் வெள்ளைச்சாமி வேதாசலம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழக கலை, வரலாறு, முருகியல் மற்றும் நுண்கலைத்துறை பேராசிரியர் கு. சேதுராமன், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக நுண்கலைப்புல விரிவுரையாளர் பேராசிரியர் எஸ். கே. சிவபாலன் ஆகியோரே இதில் கலந்து கொள்ளவுள்ள தமிழக அறிஞர்களாவர். (உ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### தருண அருண கொழும்பு நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளல்

தருண அருண (கொழும்பு) நிறுவனமானது கடந்த காலங்களைப் போலல்லாது தற்போது தினந்தோறும் தனது திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறிக்கான பதிவுகளை மேற்கொண்டு வருகிறது. எனவே தொழில் வழிகாட்டுனர் அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டு தருண அருண (கொழும்பு) நிறுவனத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளாதயாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தருண அருணவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இதற்கான சுயவிபரப்படிவம் விண்ணப்பப்படிவம் இவற்றை தொழில் வழிகாட்டுனர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ள கீழ்க்காணும் படிவங்களையும் அத்துடன் உங்கள் சுயவிலாசமிடப்பட்ட கடிதஉறை ரத்துச்செய்யப்படாத ரூபா 4.50 பெறுமதியுள்ள முத்திரையையும் இணைத்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

அனுப்பி வைக்கவேண்டிய படிவங்கள்:

1. சுயவிபரப்படிவம்
2. விண்ணப்பப்படிவம்
3. பட்டச்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாளஅட்டை ஆகியவற்றின் நகல்.

இவை சம்பந்தமான மேலதிக விபரங்களை தொழில் வழிகாட்டுனர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
யாழ். பல்கலைக்கழகம்.

(கி-4440)

# 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் படைகளில் இருந்து தப்பியோட்டம்

(கொழும்பு)

படைகளில் இருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் தாண்டிவிட்டதாக பாதுகாப்புச்செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக பேட்டியொன்றில்தெரிவிக்கையில்;

இதனால் சமூகவிரோத செயல்கள் அதிகரித்துள்ளதுடன், ஈவிரக்கமற்ற குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன.

விட்டோடிகளே பெருமளவு கொலைகளுக்குக் காரணமாயிருக்கின்றனர். அவர்களுக்கு இது தொடர்பான தொழில்நுட்பஅறிவும், மரத்துப்போன மனமும் உண்டு.

ஆயினும் ஆயுதங்கள்சகிதம் அவர்கள் விட்டோடும் வாய்ப்புக்கள் கிடைப்பது துரதிஷ்டமானது.

இதேவேளை, வடக்கு-கிழக்கின் பாடசாலைகளிலிருந்து புரிந்துணர்வு ஒப்பந்த தினத்திலிருந்து 160 நாட்களுக்குள் படையினர் வெளியேறி விடுவரென்றும், இதுவரை புலிகள் ஆட்சேர்ப்பது போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முரணானது என்றும் ஆயினும் அது உட்துறைஅமைச்சின்பொறுப்பின் கீழுள்ளதால் தன்னால் அது பற்றி கருத்துக் கூறமுடியாதென்றும் அவர்தெரிவித்துள்ளார். (உ)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்
# இரு கற்கை நெறிகள் இவ்வருடம் இடைநிறுத்தம்

(காரைநகர்)

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலைகளுக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களிற்கான விரிவுரைகள்எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 270 பேரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 200 பேரும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ், இந்துசமயம் ஆகிய கற்கை நெறிகளுக்கு எவரும் விண்ணப்பிக்காமையினால் இவ் இரு பாட நெறிகளும் இவ்வாண்டு இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார். (உ-246)

## யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில்
# இனிவரும் கல்வியாண்டில் இரு புதிய கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் இனிவரும் கல்வியாண்டில் புதிதாக இரு கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பீடாதிபதி தி. கமலநாதன் தெரிவித்தார்.

தமிழ், நாடகமும் அரங்கியலும் ஆகிய கற்கைநெறிகளே புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய கற்கைநெறிகள் இங்கு இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

# கோர்ண் சோயா போசாக்கு உணவு வழங்குவது நிறுத்தம்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் தாய் சேய் நலன் சிகிச்சை நிலையங்களில் வைத்து 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு வழங்கப்பட்டு வந்த கோர்ண் சோயா போசாக்குணவுநிறுத்தப்பட்டுள்ளது.

யுனிசெப்பின் அனுசரணையுடன்3கிலோநிறை கொண்ட இந்த சத்துமா கடந்த6மாதங்களிற்கு மேலாக யாழ் மாவட்டத்தில் உள்ள சிகிச்சை நிலையங்களில்விநியோகிக்கப்பட்டு வந்தது.

தற்போது கொழும்பில் இருந்து வரும் திரிபோஷாமா மட்டும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-252)

# நீர் விநியோகம் ஒரு மணி நேரம் போதாதென மக்கள் புகார்

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேசத்துக்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன உதவியுடன் குழாய் மூலம் நீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை,

மேற்படி திட்டத்தில் அத்துளு நன்நீர் தாங்கி மூலம் தினமும் காலை 6.30மணி முதல் 7.30மணி வரையே நீர் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு ஒரு மணித்தியாலம் வழங்கப்படும் நீரின் அளவு போதாமை குறித்து நீர்வழங்கல்வடிகால் சபைக்கு சுட்டிக் காட்டிய போதும்இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (உ-41)

## இலங்கைப் பல்கலைக்கழகங்களில்
# வெளிநாட்டுமாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

(கொழும்பு)

இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் வெளி நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது என முடிவு செய்யப்பட்டுளளது.

பல்கலைக்கழக உயரதிகாரிகளுடன் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபிர்காசிம் நடத்தியபேச்சுக்களைஅடுத்து 200வெளி நாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும்,

ஒவ்வொரு மாணவரும் 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அல்லது 96 இலட்சம் இலங்கை ரூபாக்களை கட்டணமாக வருடமொன்றுக்கு செலுத்துதல் வேண்டும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் குழுத்தலைவர் என். மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

தனது மாணவர்களுக்கு மேலதிகமாகவும் இடமொதுக்கித் தருமாறு மாலைதீவுஅரசு கேட்டதற்கிணங்கவே இவ் வதிகரிப்புக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மாணவர்களிடம்பெறப்படும்இப்பணத்தை பல்கலைக்கழகங்கள் தமக்கிருக்கும் கடனை அடைக்க பயன்படுத்தப் போவதாகவும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் மின், தொலைபேசிக் கட்டணங்களை செலுத்த உதவியளிக்கும் என்றும் என். மென்டிஸ் தெரிவித்துள்ளார். (உ)

# கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஆதரவுடன் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாச்சபை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில்,

இன்று பி.ப. 5.00 மணிக்கு சி.1எதிர் எ 2-கியூ2 ஆகியன கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

# மூதறிஞர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சைவ வாலிப சங்க ஏற்பாட்டில் மூதறிஞர் கௌரவிப்பு நிகழ்வும் பரிசில் வழங்கல்வைபவமும் ஆண்டுப் பொதுக் கூட்டமும் அண்மையில் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் தலைவர் செ.வேலாயுதபிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

யாழ். பல்கலை கழகத்தினால் முதுகலை மாணிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டவரும் யாழ்.பல்கலைக் கழகபேரவைஉறுப்பினருமான அருட்கவி சீ.விநாசித்தம்பியை அளவெட்டிகும்பழாவளைப் பிள்ளையார் கோயில் பிரதமகுருக்கள் பிரம்மஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக்குருக்கள் பொன்னாடை-போர்த்தி கௌரவித்தார்.

ஓய்வுபெற்றமாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு (விகடகவி) பாராட்டுரை வழங்கினார். (உ)

## சேவைக் காலப்
# பயிற்சி

யாழ். மாநகர சபையின் சுகாதாரப்பகுதி வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு அண்மையில் மூன்று நாட்கள் நாவலர்கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

சேவைக்காலப் பயிற்சி வகுப்பில் 35க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். (உ- 6)

# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 09

(உற்சவகாலம்)



## வாழவைப்பாய் தாயே

அலை கடலில் உறைபவளே தாயே!
அலைந் தலைந்து இளைத்து விட்டோம் அம்மா
நிலை குலையா வாழ்வு தந்து எம்மை
நிறைவுடனே வாழவைப்பாய் தாயே!

மிதிலையான்

## மாநிலம் காத்திடாய் தாரணியே!

நீரொடு நெருப்பாய் நீயிருப்பாய்
நிலமொடு விசும்பாய் வளிதருவாய்
காரொடு வெயில் உன்னாட்சி
கடலொடு புவியும் உன்மாட்சி
வேரொடு மரமே வீழ்ந்தாலும்
வித்தென மீண்டும் நீயெழுவாய்
யாரொடு நோவோம் நாரணியே-இந்த
மாநிலம் காத்திடாய் தாரணியே!

நயினைகவிஞர்-இராகுலன்

## அலைகள் துதிக்கும் அம்பிகை

அலைகள் துதிக்க அமைந்த கோயிலும்;
அருள் பொழியும்
நிலையில் உயர்ந்த நீள்மூ (லஸ்) தானமும்
நிறைந்த பக்திக்
கலையில் சூழும் கணக்கிலா அடியரும்
கயிலைவள
மலையில் எழுந்து வருதலும் நயினையின்
மகிமையதே.

நயினைக் கவிஞர் நாகசண்முகநாதபிள்ளை

## நெஞ்சினில் அவளை நினைத் திடுவோம்

அருள் வடிவான நயினையின் நாயகி
அகிலம் போற்றிடும் அன்னை நாகபூஷணி
இருளினை நீக்கி ஒளியினைத் தந்து
இந்த உலகினை என்று காத்திடு வாய்
நெஞ்சினில் அவளை நினைத்தே வேண்டின்
நெடுந்துயர் அகன்றே ஓடிடும் அன்றே
தஞ்சம் அவளென சரண் புகுந்தாலே
சஞ்சலம் நீக்கியே காத்து நிற்பாள்

மு.முத்துக்குமார்

## நீங்காத செல்வம் தருக!

வையமெல்லாம் ஒருகுடைக்கீழ் ஆள்பவளே! புகழ்
வாழ்க! அம்மை உமையே! நாகம்மையே!

செய்ய பதமலரில் மலர் சூடும் -நாகம்
செய்த தவம் பெரிது! பெரியம் மையே!

நித்தம் உனைப்பாடும் அடியருக்கே -என்றும்
நீங்காத செல்வம் தரும் சீரன்னையே!
பக்தி செய்தே பாடும் வரம் தருவாய் - உயர்
பக்குவ நெறி அருளும் அருளன்னையே!

நிவேதிதா

## பலகோடி அடியார்கள்

உன்புகழைப் பாடி
நாகம்மை வாழியென்றும்
வானெங்கும் ஒலிப்பர்

வாழி நயினையம்பதி
நாகம்மைத் தாயே
ஆழி சூழும் உலகெங்கும்
அருள் புரிவாய் தாயே

நயினை நா. சுரேஷ்

# யாழ். பல்கலையில் பத்திரிகையியல் கற்கை இவ்வருடம் ஆரம்பமாகும்

### ஊடகவியலாளர் கருத்தரங்கில் துணைவேந்தர் உறுதி

(காரைநகர்)

பிரதேச நலன்களையும் ஒருமைப்பாடுகளையும் கட்டிக் காத்த பெருமை யாழ் குடாநாட்டு பத்திரிகைகளையே சாரும் இவ்வாறு தெரிவித்தார் யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ் செயலக கேட்போர் கூடத்தில் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவன முகாமைத்துவ ஆசிரியர் தமிழ்ப் பிரிவு, எம். அமீன் தலைமையில் நடைபெற்ற போது அதில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தகவல் தொழில் நுட்பம் என்ற விடயம் பற்றி கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ரி. நந்தசார செய்தி-சித்தாந்தமும் பயன்படுத்தலும் என்ற தலைப்பில் 'லக்பிம' ஞாயிறு வெளியீடு பிரதி ஆசிரியர் ஜனாப் எம். எஸ். எம். ஐயுப் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.



துணைவேந்தர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது எமது பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த போது அரச நிர்வாக செயற்பாடுகள் யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்க பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இந் நிலையில் இவற்றை நிவிர்த்திக்க எமது பிரதேச பத்திரிகைகளின் பங்கு முக்கியமானதாகும். எவ்வளவோ அழுத்தத்தின் மத்தியிலும் குடாநாட்டுப் பத்திரிகைகள் தங்களது பணியை திறம்பட மேற்கொண்டன.

தென்பகுதிபத்திரிகைகளைப் பொறுத்தமட்டில் குடாநாட்டிற்கு வரும் செய்தியாளர்கள் எமது பிரதேச துன்ப துயரங்களை கேட்டறிந்து செல்கின்றனரே தவிர அவற்றை பிரசுரிப்பதற்கு முனைய வில்லை சிலவற்றை மறைத்தும் விட்டனர் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துரை வழங்குகையில், யாழ். பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத்துறை சார்ந்த கற்றை நெறிகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற அவர் என் மனதில் நெடு நாட்களாக உண்டு.

எனினும் இதனைக் கொண்டு நடத்த ஏற்ற விரிவுரையாளர்கள் இல்லாதிருப்பது பெரும் குறையாகவுள்ளது.

இந்த நிலையிலும் இவ்வருடம் பல்கலைக்கழகத்தில் பத்திரிகையியல் டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பிக்கலாம் எனத் திட்டமிட்டுள்ளேன் என்று குறிப்பிட்டார். (உ-246)

## பண்டத்தரிப்பில் சத்துணவுவழங்கும்திட்டம்

(சுதுமலை)

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள சாந்தைக் கிராமத்தில்இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் அனுசரணையுடன் போசாக்குணவு வழங்கும் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் அனேகமான சிறுவர்கள் போசாக்கு குறைவினால்பாதிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின்மூலம்சுமார் 75க்கும் மேற்பட்ட 1-5வயது சிறுவர்களிற்கு வாரத்தில்5 நாட்கள் போசாக்குணவு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த மார்ச் மாதம் முதல் தொடர்ந்து ஆறு மாதங்களிற்கு இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறான சத்துணவு வழங்கும் திட்டம் ஒன்றுவட்டுக் கோட்டை முதலிகோவிலடிப் பகுதியிலும் வாரத்தில் 5 நாட்கள் இடம்பெற்று வருகின்றது.

(உ-252)

### மோட்டார் போக்குவரத்து திணைக்கள

## நடமாடும் சேவை நாளை செயலகத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் நடமாடும் சேவை யாழ். மாவட்டச்செயலகத்தில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், மேலதிக மோட்டார் போக்கு வரத்து ஆணையாளர், பிரதம கணக்காளர், சிரேஷ்ட வாகனப்பரிசோதகர், வாகனப்பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத்தினங்களில் சுமார் 500 பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதன் நிமித்தம் உரிய எழுத்துப்பரீட்சையும் செய்முறைப்பரீட்சையும் நடாத்தப்படவுள்ளதால் சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பம் பெற்றவர்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பரீட்சைக்கான அனுமதிக் கடிதத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்தும் மற்றும் வாகனங்களைக் கைமாற்றம் செய்தும் ஆனி மாத காலத்திற்குள் வாகன பதிவு புத்தகம் கிடைக்கப் பெறாதவர்கள்,மற்றும் 2001 மார்ச்,ஏப்பிரல் மாதங்களில் சாரதி அனுமதிப்பத்திர பரீட்சையில் சித்தி பெற்று இன்றுவரை சாரதி அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாதவர்கள் தமது முறைப்பாட்டுக் கடிதம் மற்றும் உரியஆவணங்களுடன் அன்றைய தினங்களில் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-19)

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி புதன் கிழமை மு.ப.10.00மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நகர பிதா கந்தையன் தலைமையில்இடம் பெறவுள்ளது,

(உ-6)

## உதைபந்தாட்டம் பரு. லீக் அணி வெற்றி

(சுண்டுக்குளி)

அகில இலங்கை ரீதியில் 19 வயதுக் குட்பட்டவர்களுக்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் தவிர்த்தல் முறையிலான உதைபந்தாட்ட போட்டித் தொடரில் ஓர் அங்கமாக யாழ். லீக் அணிக்கும், பருத்தித்துறை லீக் அணிக்கும் இடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பருத்தித்துறை லீக் தலைவர் எம்.நவநீதமணி தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை லீக் அணி 4: 3 என்ற கோல் கணக்கில்வென்றது.

இப் போட்டியில் முதலாவது கோலை யாழ். அணி வீரன் றொசான் போட்டார். அதனை தொடர்ந்து 42 வது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் அணி வீரன் பிரகாஷ் 1 கோலைப் போட்டு சமனிலைப் படுத்தினார்.

இடைவேளையின் பின் பருத்தித்துறை அணி வீரன் பிரகாஷ் வெருசா தூரியமாக ஆடி 18 வது நிமிடத்திலும், 25 வது நிமிடத்திலும் 35வது நிமிடத்திலும் ஒன்றன் பின் ஒன்றாக 3கோல்களை போட்டார்.

அதன் பின்ஆட்டம் நிறைவு பெறுவதற்கு 10 நிமிடங்கள் மாத்திரம் இருக்கையில்யாழ். அணி வீரன் றொசான் அடுத்தடுத்து2கோல்களை போட்டு ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களை பெற்றார்.

இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக எம். நவநேசன் ஜே. சுபாகு, வை.ரஜனிகாந் எஸ். மெய்யழகன் ஆகியோர் கடமையாற்றினர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் முன்னாள் தலைவர் எஸ்.ரி. கண்ணாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, யாழ். அணியின் முகாமையாளர் கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-110)

## அரசியல் நிலைப்பாட்டுக் கூட்டம்

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட சண்டிலிப்பாய், மானிப்பாய், பண்டத்தரிப்பு, ஆனைக்கோட்டைப் பகுதிகளில்உள்ள சனசமூக நிலையங்களின் தலைவர் செயாலளர், பொருளாளர் மற்றும் நிர்வாகஉறுப்பினர்களுக்கான விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு தொடர்பான முக்கிய கலந்துரையாடல்இன்றுபி.ப. 3 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-252)

## நயினையில் நாளை மஞ்சம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்ஆலய வருடாந்தஉற்சவத்தின் 10 ஆம் நாளான, நாளை புதன்கிழமை மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது. (உ-8)

## நடமாடும் பற்சிகிச்சை நிலையம்

அராலி வட்டுக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள பிரிவில்உள்ள 16 பாடசாலைகளின் மாணவர்கள நன்மைகருதி, நடமாடும் பற்சிகிச்சைநிலையம் ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இதனை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதி பாடசாலைகளில் அதிகமான மாணவர்களிற்கு பல்லில் குறைபாடுகள், இருப்பதாக பாடசாலை மருத்துவ பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இதை நிவர்த்தி செய்வதற்காக இந்த நடமாடும் பற்சிகிச்சை நிலையச்சேவையைசுகாதார வைத்திய அதிகாரியும் யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர் ஊடாக தமது பெற்றார்களுடன் சமுகமளித்து இச் சேவையைபயனுடைய முறையில் பெற்றுக்கொள்ளுமாறு மாணவர்களைக் கேட்கப்பட்டுள்ளது. (உ-252)

## கல்லூரித் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் கல்லூரி தினம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார விவகார அமைச்சர் கருணாசேனகொடித்துவக்கும் கௌரவ விருந்தினராக அமைச்சரின் செயலாளர் வி. கே. நாணயக்காராவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக செயலாளர்களான டி. பி. அமரசிங்க, எஸ். தில்லை நடராசா மற்றும் பிரதான ஆணையாளர் எம். இப்ரகிம், திட்டப்பணிப்பாளர்களான டி. பசாநாயகா, எஸ். எம். கலகொட ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## மீளக்குடியமரும்பகுதிகளில் முகாம்கள் அமைப்பு மக்கள் ஏமாற்றம்

(ஈச்சமோட்டை)

சாவகச்சேரியில் மக்கள் குடியிருப்புக்காக துப்புரவு செய்த பகுதிகளை திடீர் திடீரென இராணுவம் அபகரித்து முகாம்களை அமைத்து வருவதால்மக்கள்விசனம் அடைந்துள்ளனர்.

பிரதானவீதியை அண்டிய பகுதிகளில் மக்கள் தத்தமது வீடுகளை துப்புரவு செய்து புனரமைப்புகளை செய்ய ஆயத்தமாகியுள்ள வேளைகளில் இராணுவம் இவ்வாறு நடந்து கொள்வது முறையற்றதெனவும்.

பல வீட்டு கூரைகள் மரங்கள், தளபாடங்களை ஓரிடமாக்கிய பின்னர் தமது தேவைக்காக இராணுவம் அவ்விடங்களை பயன்படுத்துவதால் தாம் உடமைகளை இழக்க வேண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-59)

### விதிகளை மீறும் தனியார்

## வாகன உரிமையாளர்களுக்கு எதிராகத் தனியான சட்டம்

(கொழும்பு)

வீதிப்போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்கத் தவறும் தனியார் வாகன உரிமையாளர்களுக்கு எதிராக தனியான சட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று சட்டத்துறை நிபுணர்கள் போக்குவரத்து அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இவர்களுக்கென தனியான ஓர் சட்டம் வகுக்கப்படாமையால் சாரதிகளுக்கு விபத்துக்கள் தொடர்பாக குறைந்த தண்டனையே வழங்கப்பட்டு வருகிறது.

இதனால் அவர்களுக்கு விபத்துக்கள் குறித்து அச்சம் கிடையாது எனவும்,

அண்மைக் காலங்களில் நாட்டின் பல பாகங்களிலும் தனியார் வாகனங்களினால் விபத்துக்கள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## மக்கள் வங்கி இயக்குநர் இன்று யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி இயக்குநரும் சபைத் தலைவருமாகிய லால் நாணயகாரர் இருநாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் இவர் மக்கள் வங்கி கிளைகளின் முகாமையாளர்களையும் வாடிக்கையாளர்களையும் மற்றும் திணைக்கள அதிகாரிகளையும் பத்திரிகையாளர்களையும் சந்தித்து வங்கிநடவடிக்கைகள் குறித்து விளக்கவுள்ளார்.

இவர் மக்கள் வங்கியின் நீடித்தகருமபீடங்களை ஆரம்பித்துவைப்பதுடன் ஜபஸ்ரீ 2 இல் பரிசு பெற்றவாகளுக்கு பரிசில்களையும் வழங்குவார்.

(உ-6)

# இன்று ஒரு தகவல்

## நாட்டின் விலை என்ன?

ஒரு நாட்டை அரசன் ஒருவன ஆண்டு வந்தான். அவன் மிகவும் தற்பெருமை கொண்டவனாக இருந்தான்.

அரசனும் அவன் நண்பனும் காட்டில் வேட்டையாடுவதற்காக ஒருநாள் காட்டிற்குச் சென்றனர். அங்கும் இங்கும் அலைந்து திரிந்ததால் அரசனுக்கு நீர் வேட்கை உண்டாயிற்று.

நண்பனைப்பார்த்து 'எங்கேனும் சென்று குடிப்பதற்கு நீர் கொண்டுவா' என்றான். தண்ணீர் தேடிச்சென்ற நண்பன் வேண்டுமென்றே காலந் தாழ்த்தி நீருடன் வந்தான் 'விரைவில் தண்ணீர் கொடு, நான் குடிக்க வேண்டும்' என்றான் அரசன்.

அதற்கு அந்த நண்பன், 'அரசே! சற்றுப் பொறுங்கள். நீங்கள் மிகவும் பெருமைக்கு உரியவர். இப்பொழுது தாகத்தால் துடித்துக் கொண்டிருக்கிறீர் இச்சூழலில் இந்தத் தண்ணீருக்கு விலையாக என்ன தருவீர்?' என்று கேட்டான்.

உடனே அரசன் 'இதற்கு விலையாக என் நாட்டில் பாதியைத் தருவேன்' என்று பெருமையுடன் சொல்லியபடி அந்நீரை வாங்கிக் குடித்தான்.

அப்பொழுது அந்த நண்பன், தங்கள தகுதிக்கு உரியயதைச் சொன்னீர்கள். இப்பொழுது நீங்கள் குடித்த இந்நீர் உடலைவிட்டுச் சிறுநீராக வெளிவரவில்லை என்று கொள்வோம். அதுவும் துன்பம் தரும். அந்த நீர் வெளிவந்து உடல் நலம் பெறத் தாங்கள் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டான்.

இதற்கும் 'என் நாட்டில் மறுபாதியைவிலையாகத் தருவேன்' என்றான் அரசன்.

இதைக் கேட்ட நண்பன், 'ஒரு கோப்பைத் தண்ணீர் குடிப்பதற்கும் அதே ஒரு கோப்பை நீர் வெளியேறுவதற்கும் உங்கள் நாட்டையே தருவதாக ஒப்புக்கொண்டுள்ளீர்கள். அப்படியானால் உங்கள் நாட்டின் மதிப்பு ஒரு கோப்பை நீரின் மதிப்புத் தானே இந்நாட்டை ஆள்வதற்காகவா இவ்வளவு பெருமை கொண்டுள்ளீர்?'

அரசன் இதைக் கேட்டுத் தலை கவிழ்ந்தான் அவன் தற்பெருமை அன்றோடு ஒழிந்தது.

பேராசிரியர் எ. சோதி

# கட்டண உயர்வை கட்டுப்படுத்த

# சீராக்கல் ஆணைக்குழு அமைப்பு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்கள், மருந்துவகைகள், உணவு வகைகள், நீர், மின்சாரம், மசகுஎண்ணெய், வாயு, போக்குவரத்துக் கட்டணங்கள் ஆகியவை உயர்ந்து கொண்டு போவதை கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் கொண்ட சீராக்கல் ஆணைக் குழுவொன்றை அரசாங்கம் அமைக்கவிருக்கிறது.

இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்தவாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டதும், விலைக்கட்டுப்பாட்டை மீறுபவர்கள்மீது நடவடிக்கையெடுக்கப் படுவதுடன், முன் அனுமதியின்றி கட்டணங்களை அதிகரிக்கும் பஸ்வண்டி உரிமையாளர்களின் வாகன அனுமதியை ரத்துச்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்டணங்களை அதிகரிக்க விரும்பும் பஸ்உரிமையாளர்கள் அதற்கான காரணத்தை விளக்கி இந்த ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். (உ)

## பவள விழா ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பவள விழாவை விமரவில் கொண்டாடும் வகையில், கல்லூரியின் மாணவச் சமூகத்தினர் அந்நடவடிக்கையில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

## ஒப்பந்தத்தை எதிர்த்து கோட்டையில் ஆர்ப்பாட்டம்

### நாளை நடத்த ஜே. வி. பி. ஏற்பாடு

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக நாளை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

ஜே. வி. பி யின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இவ் ஆர்ப்பாட்டம் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அனுகூலங்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதாக குற்றஞ் சாட்டி அரசுக்கெதிராக இடம்பெறவுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் மாத்தறையிலும் இவ்வாறானதோர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. (உ)

## வருடாந்த உற்சவம்

(அளவெட்டி)

அளவெட்டி பெருமாள் கடவை பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-8)

பள்ளிமாணவி கடத்தல் விவகாரம்

## முன்னாள் அதிரடிப்படை வீரருக்கும் சம்பந்தம்

(கொழும்பு)

கொஸ்கொட என்னுமிடத்தில் பள்ளிமாணவி கடத்தப்பட்டு 25 இலட்சரூபா பணயப் பணம் கொடுத்தபின் விடுவிக்கப்பட்ட விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இரு பிரதான சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில்ஒருவர் அதிரடிப் படையிலிருந்து விட்டோடியவர். மற்றவர் ராஜகிரியவிலுள்ள ஆயுள்வேதக்கல்லூரி மாணவர்.

ஆயுள்வேத கல்லூரி மாணவரின் வீட்டுத் தோட்டத்தில் நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த ரூபா 12 இலட்சமும், அதிரடிப்படை விட்டோடியிடமிருந்து மீதிப்பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதென்று தென் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

பள்ளிமாணவியின் வீட்டிற்கு சமீபமாக வாழ்ந்து வரும் சந்தேகநபர்களிடமிருந்து 14 துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (உ)

## புதையல் தோண்டியோரை பொலிஸார் கைது

(கொழும்பு)

ஹெப்பிட்டி பொலவ பகுதியில் புதையல் எடுக்க முற்பட்ட 6 பேரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களில் 4 ஊர்காவற்படை வீரர்களும் ஒரு கிராமசேவகரும் அடங்குவர்.

இவர்கள்அனைவரும்ஹெப்பிட்டிபொலவ பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களிலும் இப்பகுதியில் புதையல் எடுக்க முற்பட்டோரை பொலிஸார் கைது செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## நயினை உற்சவத்தில் தென்னிலங்கை பக்தர்கள்

(மண்டைதீவு)

நயினை நாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்தில் பெருமளவு தென்னிலங்கை பக்தர்கள் கலந்து கொள்வதைக் காண முடிகிறது.

கடந்த 12 ஆண்டுகளின் பின்னர் தரை வழிப் பாதை திறக்கப்பட்டதன் பின்னர் பெருமளவு தென்னிலங்கை பக்தர்கள் இவ் வருடம் வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களச் சகோதரர்களும் அடங்குவது குறிப்பிடத்தக்கது. (உ-11)

## அடிக்கல் நாட்டுவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிஇந்து இளைஞர் பேரவையின் புதியஅலுவலக கட்டடத்திற்கான அடிக்கல்நாட்டுவிழா கிளிநொச்சிநகரில்பஸ்டிப்போ சந்தியில் பேரவையின் தலைவர் திரு. சி. நவரெத்தினராசா தலைமையில் நடைபெற்றது.

இரண்டுமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை கிளிநொச்சி இந்து இளைஞர் பேரவைஉபதலைவர்டாக்டர் கே.வி.கே திருலோகமூர்த்தி ஜே.பி சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார். (க)

## இந்திய ஆயுட் காப்புறுதி நிறுவனம்

## இலங்கையுடன் இணைந்து இயங்க முன்வருகை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றுடன் இணைந்து செயற்படுவதற்கு இந்திய ஆயுட்காப்புறுதி நிறுவனம் முன்வந்துள்ளது.

இவ்வாறு செயற்படுவதற்கான பூர்வாங்க ஏற்பாடாக இந்திய ஆயுட் காப்புறுதி நிறுவனம் 2 கோடி 70 இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

இணைந்து செயற்படவுள்ள இத்திட்டத்தில் இருபத்தைந்துசதவீதமான தொகையையே இலங்கைக்கு வழங்கவுள்ளது.

1961 ஆம் ஆண்டுகாலப்பகுதிகளில் உள்ளூர் காப்புறுதிகளில் பெரும் பங்கு கொண்டிருந்த இந்தஇந்தியநிறுவனம் இலங்கை அரசாங்கம் காப்புறுதி நிறுவனங்களை பொறுப்பேற்ற பின்னர் இங்கிருந்து வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சைவப்புலவர் சங்கத்தின் புராணபடன போட்டி

### பரிசில்கள் ஞாயிறன்று வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சைவப் புலவர் சங்கம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய புராண படனப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகளுக்கு வண்ணைநாவலர் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சைவப்புலவர் சங்க 42வதுஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

ஆண்கள் பிரிவில் ;

1-ம் இடத்தினை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் இ. பிரபு, ச.லஸ்மன் ஆகியோர் பெற்றனர்.

இரண்டாம் இடத்தினை யாழ் சைவப்பிரகாச வித்தியாசாலையைச் சேர்ந்த க.செந்தில்நாதன், பா.கிருஷ்ணபவன் ஆகியோர் பெற்றனர்.

மூன்றாம் இடத்தினை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த நிஷாந்தன், நி. பகிரதன் ஆகியோர் பெற்றனர்.

பெண்கள் பிரிவில்:

1-ம் இடத்தினை யாழ் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த செல்வி சி. மலர்விழி, ச.விஷ்னுப்பிரியா ஆகியோர் பெற்றனர்.

இரண்டாம் இடத்தினை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச்சேர்ந்த க.சீனுஜா, செ.ஜீவிதா ஆகியோரும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த அ.சிவசக்தி, இ.டனுஸ்ரா ஆகியோரும் பெற்றனர்.

மூன்றாம் இடத்தினை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த ஜெ.சோபனா, இ.நிர்மலா ஆகியோரும் பெற்றனர். இவர்களுக்கான பரிசில்களை சைவபரிபாலன சபைத் தலைவர் கந்தசாமி வழங்கினார். (க-02)

## ஆண்டு நிறைவும் பட்டமளிப்பும்

(யாழ்ப்பாணம்)

நாற்பத்து இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் சைவப்புலவர்களுக்கானபட்டமளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக் கிழமைகாலை 9-00 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் சைவப்புலவர்களுக்கு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள் அருளுரை வழங்கினார்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க வரலாற்று நூல் வெளியீடும் இடம்பெற்றது. இந்நூலினை பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியினை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக்கொண்டார். (க-23)

## சிந்தனைக்கு விருந்து

### வீதி விபத்துக் காரணிகள்

சமாந்தரமாய்ச் சைக்கிள்களில் ஓடிச் செல்வோர்
சாலைவிதி தெரியாமல் சவாரி செய்வோர்
தமதுதள் ளாமையினை உணரா தாராய்த்
தளர்வுடனே வாகனங்கள் ஓட்டு வோர்கள்
சமமின்றிக் குண்டுகுழி யாகி விட்ட
சாலைகளில் உந்துகளைச் செலுத்திச் செல்வோர்
இமைப்பொழுதில் குறுக்கோடி மோதி வீழ்வோர்
இவர்களால் வீதிவிபத் தளவே இல்லை.

-பழையவன்

உந்துகள் -

வாகனங்கள் (கார், பஸ், லொறி, வான் முதலியன)

# கற்றலினதும் கற்பித்தலினதும் உன்னதத்தை உயிராகப் போற்றுவது யாழ்ப்பாண மண்

## "மூன்றாவது மனிதன்" ஆசிரியர் எம். பௌசருடன் ஒரு நேர்காணல்

சந்திப்பு:
**சாந்தன் சத்தியகீர்த்தி**

'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையின் ஒத்துழைப்புடன் யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை ஏற்பாடு செய்த நூற்கண்காட்சியும் விற்பனையும் இம்மாதம் 14,15,16,17 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கண்காட்சியில் சிறுகதை, நாவல், கவிதை, மற்றும் நோபல் பரிசுபெற்ற படைப்புகள், மொழியாக்கம், விமர்சனம், பெண்ணியம், தலித்தியம், மாக்சியம், பெரியாரிஷம், கலை, சினிமா, மதவியல், பொருளியல், பண்பாட்டியல், அரசியல், தத்துவம், மானிடவியல், சமூகவியல், கல்வியியல், மனையியல், நாட்டுப்புறவியல், கணனியியல், பழந்தமிழ் இலக்கியம், சோதிடம் என அனைத்துத்துறை சார்ந்த நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந் நான்கு தினங்களும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விமான்கள், புத்தகப் பிரியர்கள் என புலமை சார்ந்தோர் பெருந்திரளாகக் குவிந்து இவற்றைப் பார்வையிட்டதுடன் தமது விருப்புக்கேற்ற நூல்களைக் கொள்வனவு செய்து சென்றதையும் காணமுடிந்தது.

இக் கண்காட்சியின் நோக்கம் பற்றி மூன்றாவது மனிதன் ஆசிரியர் எம். பௌசர் தெரிவித்த கருத்துக்களைப் பார்ப்போம்.

கேள்வி:-
படைப்பாகத்தில் ஆர்வத்தைத் தூண்டிய காரணிகளையும் அதன் மூலம் ஏற்பட்ட வளர்ச்சியையும் இன்றுள்ள நிலை பற்றியும் சற்று விளக்குவீர்களா?

பதில்:-
ஆரம்பத்தில் தீவிரமாக வாசிக்கும் ஒரு வாசகனாக இருந்தேன். வாசிப்பின் விளைவு என்னைத் தீவிர புத்தகப் பிரியன் ஆக்கியது. அதனூடாகக் கலை, இலக்கிய, அரசியல் தளங்களில் ஆர்வமும் தேடலும் அதிகரித்தது.

எழுத வேண்டும்; வாசிக்க வேண்டும்; நூல்களைச் சேகரிக்க வேண்டும் என்ற உணர்வு மேலிட்டது. அனுபவம் பெற வேண்டி மக்களையும் எழுத்தாளர்களையும் சந்திக்க வேண்டிய தேவை எழுந்தது. இதனால் பயணம் செய்ய வேண்டும் என்ற உந்துதல் அதிகமாகியது. இவ்வாறாக எனது இளமைக் காலம் கழிந்தது.

பின்பு நவீன இலக்கிய அறிவுத் தேட்டங்களிலும் வாதங்களிலும் எனது கவனம் குவிந்தது. இவைகளைச் சமகாலத்தில் நடைபெறும் வாதங்களின் ஊடகமாகக் கற்றுணர முடிந்தது.

கேள்வி:-
இவ்வாறான தேடல்களைத் தொடர யாரேனும் வழிகாட்டிகளாக இருந்தார்களா?

பதில்:-
இக் கற்றலுக்கு தமிழில் வெளியாகிய சிற்றிதழ்கள் உறுதுணை புரிந்தன. அக்காலத்தில் ஈழத்தில் பல சிற்றிதழ்கள்பல் வேறு தளங்களில்இடையிடையேவெளியாகிக்கொண்டிருந்தன. அவைகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக அலையும்வியூகமும் இருந்தன.

> இக் கண்காட்சி நடைபெற்ற நான்கு தினங்களும் அறிஞர்கள் மிகச் சந்தோசமான மனநிலையில் இருப்பதை நான் உணர்ந்தேன்.
> மிகத் தேவையான ஒரு பணியினைச் செய்திருப்பதாக பலரும் பாராட்டுகிறார்கள்.
> இவ்வாறான முயற்சிகள பல்வேறு தளங்களிலும்பல்வேறுநிறுவனங்களினால்நடத்தப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

அவைகள் தங்கள்வருகையை நிறுத்திக்கொண்ட காலத்தில் ஈழத்து இலக்கியத்தைமையப் படுத்திய அல்லது பின் தளமாகக் கொண்ட சிற்றிதழ் ளின் தேவை அதிகமாக உணரப்பட்ட காலத்தில் என்னைவிட அறிவும் ஆற்றலும் கூடியவர்கள் செய்யத்தயங்கிய ஒரு பணியினை நான் செய்ய முயற்சித்தேன்.

அதுதான்இன்றுபதினைந்து இதழ்கள் வெளியாகியுள்ள 'மூன்றாவது மனிதன்' சிற்றிதழ் ஆகும். பல்வேறு பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ந்தும் ஒரு சிறு சஞ்சிகை கொண்டு வர வேண்டும் என்ற ஆவல் மேலீட்டினால் இச்சிற்றிதழ் தொடர்ந்து வெளிவருகின்றது.

கேள்வி:-
இதன் மூலம் வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டதாகக் கருதுகிறீர்களா?

பதில்:-
இச்சிற்றிதழ் வருகையுடன் தொடர்புபட்டு ஏற்பட்ட புரிதலின் காரணமாக ஈழத்து எழுத்துக்களை நூலாக்கும் முயற்சியில் அதிக ஆர்வம்காட்டினேன். இன்று வரை எமது மூன்றாவது மனிதன் பதிப்பக வெளியீடாக இருப்பது நூல்கள் வெளி வந்துள்ளன. ஐந்து வருட காலத்திற்குள் இவ்வுழைப்பு பெரிதென்றே நான் நினைக்கிறேன்.

புத்தகத்தின் மீது கொண்ட அதிக ஆர்வம் காரணமாக பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட நான் அரிதான புத்தகங்கள் ஈழத்துத் தமிழ்ச் சூழலுக்கு கிடைப்பதில்லை என்ற ஏக்கத்தை உணர்ந்தேன்.

தமிழகத்திலும் இலங்கையிலும் வெளியாகும் சிறந்த நூல்களை என்போன்ற படைப்பாளிகள் பெற முடியாது இருப்பதை நீண்ட காலமாக உணர்ந்துவந்தேன். பரீட்சார்த்த முயற்சியாகச் சிறந்த நூல்களை ஈழத்துத் தமிழ்ச் சூழலுக்குக் கொணர்ந்து பரவலாக்குவதில் கடந்த ஆண்டிலிருந்து முயற்சித்தேன்

நமது சூழலில் மிகப்பெரும் இடைவெளியும் வெற்றிடமும் இத்துறையில் இருந்ததனால் எனதுமுயற்சிக்கு மிகப்பெரும் ஆதரவும் ஒத்துழைப்பும் கிட்டின. அதன் பின் இம் முயற்சியில் அதிக அக்கறை செலுத்தினேன்.

கேள்வி:-
வியாபாரப் போட்டிகள் இதற்குத் தடைகளாகஅமையவில்லையா?

பதில்:-
இந்த நிலையின் காரணமாகவும் ஏலவே உள்ள நூல் விற்பனையாளர்களின் அசமந்தப் போக்குக்காரணமாகவும் வடக்கு - கிழக்கு தமிழ்ச் சூழலுக்கு மிகக் கட்டாயமாகக் கொண்டு வந்து சேர்த்திருந்தும் பல்வேறு தரப்பினால் வாசிக்கப்பட வேண்டிய நூல்கள் கிடைக்கவில்லை.

இதனால் இந்த நூல்களை வடக்குக்கிழக்கின் சகல பிரதேசங்களுக்கும் கொண்டு சென்று பரவலாக்கும் கலாசாரச் செயற்பாட்டினைச் செய்யவேண்டி இருந்தது. இதன் வழியில் தான் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையின் அழைப்பை ஏற்று இங்கு ஒரு நூற்கண்காட்சியை நடத்தினோம்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா மற்றும் விரிவுரையாளர்களான அகிலன், சனாதனன், அருந்தாகரன் ஆகியோரின் பெரு முயற்சியினால்இப்பணி செவ்வனே நடந்துள்ளது. இம் முயற்சியின் வெற்றிக்கு துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தனது முழு ஆதரவையும் வழங்கி இருக்கிறார்.

கேள்வி
இன்றைய யாழ்ப்பாண நிலைமைபற்றி உங்கள் அவதானம் என்ன?

பதில்:-
யாழ்.மண்ணென்பது கற்றலினதும் கற்பித்தலினதும உன்னதத்தினை உயிராகப் போற்றும் மண் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் படைப்பாளிகள், வாசகர்கள், விரிவுரையாளர்கள் எனப் பெருமளவினர் வருகைதந்து நூல்களைப் பார்வையிட்டு தமது வாசிப்பின் தேவைக்கு இவற்றைத் தமதுகரங்களுக்கு கொண்டு வந்து சேர்த்ததை மிக்க நன்றியுடன் நினைவு கூருகிறார்கள்.

இக்கண்காட்சிநடைபெற்ற நான்கு தினங்களும் அறிஞர்கள் மிகச் சந்தோசமான மன நிலையில் இருப்பதை நான் உணர்ந்தேன் மிகத்தேவையான ஒரு பணியினைச் செய்திருப்பதாகப்பலரும் பாராட்டுகிறார்கள். இவ்வாறான முயற்சிகள் பல்வேறு தளங்களிலும் பல்வேறு நிறுவனங்களினால்நடத்தப்படவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

இந்த வருகையினூடாக யாழ்ப்பாணத்து சிந்தனையிலுள்ள எழுத்துக்களை நூலாகப் பதிப்பிக்கும் ஒரு பணியினையும் செய்யஉத்தேசித்துள்ளோம். இன்னும் மூன்று மாதத்திற்குள் பத்திற்கும் மேற்பட்ட இலக்கிய ஆய்வுத் துறை நூல்கள் எமது பதிப்பகத்தால் வெளியிடப்படவுள்ளன.

## உடுவில் கோட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
உடுவில் கோட்டப் பாடசாலைகளின்அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர், ஆசிரியர்களது பிரச்சினைகள், தேவைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடவிருப்பதால் சகல அதிபர், ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் அறிவித்துள்ளார். (உ)

## சமூக சீரழிவு ஒழிப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
சமூக சீரழிவு ஒழிப்புக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 10.00மணிக்கு நகரபிதா செ. கந்தையன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் சமூக சீரழிவுச் செயல்களை கட்டுப்படுத்தும் முகமாக குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக முதல்வர் தெரிவித்தார். (உ- 6)

## மன்னாரில் கபடிப் போட்டி

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்திலிருந்து ஆண், பெண் கபடி விளையாட்டுவீரர்கள் வடக்கு கிழக்குமாகாணமட்டப்போட்டியில் கலந்துகொள்வதற்காக எதிர்வரும் 20ம்திகதி வியாழக்கிழமை மன்னாருக்குச் செல்லவுள்ளனர்.

யாழ்மாவட்டத்தில் இருந்து ஆண், பெண்உட்பட 52வீரர்கள் மன்னாருக்குசென்று 22, 23ம்திகதிகளில் வடக்கு கிழக்கில் உள்ளஒவ்வொரு மாவட்டங்களின் அணிகளுடன் மோதவுள்ளனர்.

மன்னாரில் 22,23ம்திகதிகளில் நடக்கும் கபடிவிளையாட்டுக்களில் பங்பற்றவுள்ளனர். (உ-6)

## நடமாடும் சுகாதார சேவை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகரசபையின்நடமாடும் சுகாதார சேவை எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் முதலாம் வட்டாரம் சுப்பிரமணியம் பூங்காப் பகுதிகள்சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன.

50சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக சுகாதாரக்குழுத் தலைவர் ம. மங்களநேசன் தெரிவித்தார். (உ- 6)

## சேது சமுத்திரத் திட்டம் அடுத்த ஆண்டில் அமுல்

(புதுடில்லி)
இந்தியா -இலங்கைக்கு இடையிலான சேது சமுத்திர கால்வாய்த் திட்டம் அடுத்த வருடம்நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக யூனியன் போக்குவரத்து அமைச்சர் றேட்பிரகாஷ்றோயல் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தில் முதற்கட்டமாக 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் தொன் நிறையுள்ள கப்பல்கள் செல்லும் வகையில் பாக்கு நீரிணை ஆழமாக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தினைஅமுல் படுத்துவதற்கு நிதி பெரும் பிரச்சினையாகவுள்ளது என பல்வேறுபட்ட தகவல்கள் தெரிவித்து வந்தாலும், அது ஒரு பிரச்சினையாக இல்லை என மறுத்தார்.

அத்துடன் இதனை அமைப்பதில் இந்தியப்பிரதமர் முனைப்பாகவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையரசு இக்கால்வாயை அமைப்பதற்கு ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்து வந்தாலும் தற்போது அது ஒத்துழைப்பை வழங்கிவருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

# பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தல் நடுநிலை வலதுசாரிக்கட்சி வெற்றி

## இடதுசாரிகளுக்கு அதிர்ச்சித் தோல்வி

(பரிஸ்)
பிரான்சில் இடம்பெற்ற இரண்டாவது சுற்றுபாராளுமன்றத்தேர்தலில் ஜனாதிபதி யத்ஸராத்தின் நடுநிலைவலது சாரிக் கட்சிபெரும்பான்மை வாக்கைபெற்றுள்ளது.

பிரான்சின் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்றொபேட் உட்பட பலஇடதுசாரி முக்கிய பிரமுகர்கள் அதிர்ச்சித் தோல்வியை அடைந்துள்ளனர்.

577ஆசனங்களை கொண்ட பிரான்சின் பாராளுமன்றத் தேர்தலில் 8ஆயிரத்து400க்கும் அதிகமான வேட்பாளர் போட்டியிட்டனர்.

பிரான்சின் ஜனாதிபதி யத்ஸராத் இத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளமையால்பிரான்ஸ் நாட்டு அரசியலில் பலமுக்கிய திருப்பங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 6ம்திகதி நடைபெற்ற முதலாவது சுற்றுத் தேர்தலில் 43சதவீதத்தால் நடுநிலை வலதுசாரிக்கட்சி முன்னணியில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

பழுதெண்ணும் மந்திரியின்
பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.

குறள்

# வலம்புரி

## மகிந்தவின் புதிய ராகம்

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமாயின் மக்களின் ஆணையைப் பெறவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் இக்கருத்து ஆச்சரியத்துக்குரியதல்லவெனினும் அது ஜனநாயகத்துக்கு விரோதமானதாகவும் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சியைக் குழப்புகின்ற நடவடிக்கையாகவும் உள்ளது.

அரசின் சமாதான முயற்சியைக் குழப்பக் கூடிய வல்லமை மகிந்த ராஜபக்ஷவுக்கு உண்டென்ற அடிப்படையிலேயே அவரை எதிர்க்கட்சித் தலைவராக்கும் முடிவு பொது ஜன ஐக்கிய முன்னணிக்குள் எழுந்தது. கட்சி தன் மீது கருதிக் கொண்ட அனுமானத்தை யதார்த்தத்தில் நிரூபிப்பது போல் மகிந்த ராஜபக்ஷ நடந்து கொள்கிறார்.

இலங்கையில் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த எவருமே பொறுப்புணர்வோடு சமாதானம் ஏற்படுவதற்கு உதவி புரிந்ததாக வரலாறு இல்லை. அந்த மரபு வழிக் கொள்கையை தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் கைவிடுவதாக இல்லை.

எப்படியும் அரசின் சமாதான முயற்சியைக் குழப்பிவிடவேண்டுமென்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமாயின் மக்கள் ஆணையைப் பெறவேண்டுமென்பது அரைத்த மாவை மீண்டும் அரைப்பதற்கு ஒப்பானதாகும்.

தற்போதைய ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் கடந்த பொதுத் தேர்தலில் நாம் ஆட்சிக்கு வந்தால் சமாதானத்தைஏற்படுத்துவோம் எனக் கூறியிருந்தது அவ்வாறு சமாதானம் எனக் கூறியதற்காகவே ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்கள் வாக்களித்து அரசாட்சி அதிகாரத்தைவழங்கினர். சமாதானம் என்பது புலிகளின் தடையை நீக்குவதிலேயே தங்கியுள்ளதென்பது சகலரும் அறிந்ததே. எனவே மக்கள் ஐ.தே முன்னணிக்கு வாக்களித்ததன் மூலம் புலிகளின் தடை நீக்கத்திற்கு வாக்களித்துள்ளனர். ஆதலால் மக்கள் அனுமதி மீண்டும் தேவையில்லை.

# எலிகளால் தொற்றும் நோய்களும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளும்

## மருத்துவ விளக்கம்

வைத்திய கலாநிதி

**இ. இராஜராஜேஸ்வரன்**

மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

எலிகள் கொறிக்கும் விலங்கினத்தைச் சேர்ந்தவை இவை வளை எலி (**Rattus–norvegicus**), வீட்டு எலி (**Rattus-rattus**), சுண்டெலி (**Mus musculus**) என மூவகைப் படும். வளை எலிகள் மிகவும் பிரகாசமான இளஞ்சிவப்பு நிறமுடையவை. வயிற்றுப்பகுதி வெள்ளை நிறமானது. வீட்டு எலி மங்கலான மேல் ரோமமுடையது. இதன் வயிற்றுப்பகுதி அழுக்குப்படிந்தனவாய்த் தோன்றும். பருவ கால மழை தொடங்கியதும் வளை எலிகள் மழையில்நனைவதைத் தவிர்க்கும் பொருட்டு வீட்டுக்குள் வாழ முயல்கின்றன.

நம்மிடையே எலிகள் வாழ்வதால் அவை நம் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும்நோய்களைப் பரப்புவதற்கு முக்கிய காரணமாகின்றன. மனிதனுக்கு வீட்டெலிகளாலும் சுண்டெலிகளாலும் மிகுந்த தொல்லைகளும், அளவற்ற நாசமும் விளைகின்றன. எலிகளை அழிப்பதற்கு எடுத்துக் கொள்ளும்முயற்சிகள் அனைத்தும் தோல்வியுறுகின்றன. எலிகளின் மிகக் கூடுதலானஇனப் பெருக்க விகிதமே அதற்குக் காரணமாகும். உணவுப் பொருட்களை நாசம் செய்வதைவிட, எலியின் கறை பட்ட உணவு பார்ப்பதற்கு சுத்தமாகத் தென்படினும் சிலவேளைகளில் அவை மனிதனுடைய ஆரோக்கியத்தைப் பாதிப்பதாக அமையக்கூடும்.

பிளேக் (**Bubonic plague**)

எலிகளால் பரப்பப்படும் நோய்களுள் மிக முக்கியமான பிளேக் (**Bubonicplague**) எனப்படும் நிணநீர்க்கணுக் கொள்ளை நோயாகும். இந்நோயைப் பரப்பும் பிரதான காரணிகள் வளை எலியும், வீட்டெலியுமாகும். இதைவிட வீட்டுச் சுண்டெலியும் நோயைப் பரப்புவதில் பங்கு கொள்வதாக அறியப்படுகின்றது. இந்தியாவில் பிளேக் நோய் பல்லாயிரக்கணக்கான மனிதர்களின் உயிர்களைக் குடித்துள்ளது. இக்கொடிய கொளளை நோய்முக்கியமாக எலிகளுடனும், எலித் தெள்ளுகளுடனும் (**Xenopsylla–cheopis**) தொடர்புடையதாகும். பிளேக் இயற்கையாகவே எலிகளின் தொகையைக் குறைப்பதற்காக தவறாமல் தோன்றி வருகின்றது.

கொள்ளை நோய் கண்ட எலிகள் இறந்து விடுகின்றன. நோயுள்ள எலிகளின்இரத்தத்தைக் குடித்த தெள்ளுகள்மனிதனையும் தாக்குகின்றன. மனிதனின் இரத்தத்தைக் குடிக்கும் வேளையில் கொள்ளைநோய்க்கிருமிகளை (**Yarsinia pestis**) உட்லுள் செலுத்துகின்றன. தெள்ளு கடித்த இடத்தில் ஆரம்ப காயம் உண்டாகி24 மணித்தியாலத்தில் அரை, அக்குள், கழுத்து நிணநீர்க் கணுக்கள் பருத்து பின் உடைந்து சீழ் சுரக்கும். காய்ச்சல், நடுக்கம், தலையிடி, விறைப்பு, நிணநீர்க் கணு நோவு முதலியனகாணப் படும்.

எலிக்கடிக் காய்ச்சல்

**Ratbite fever**

எலிகள் கடிப்பதால் எலிக் கடிக் காய்ச்சல் (**Ratbitefever**) என்னும்நோய்உண்டாகிறது. இந்நோய் நீண்ட நாட்களுக்குப் பின்னரும் குணமாவதில்லை.

மனிதனுடன் பழக்கப்பட்ட எலிகள் மிகவும் துணிச்சலாக தூங்கும் மனிதர்களையும், குழந்தைகளையும் அடிக்கடி தாக்க முயல்கின்றன. எலிக்கடிக் காய்ச்சல் இரண்டு விதமானது. **Spirullumminus** என்ற கிருமியல் ஏற்படும் சொடொகு காய்ச்சல் ஒன்று, மற்றையது **ActinobacillusMuris** என்ற பக்ரீரியாவினால் ஏற்படும் ஹேவஹில் காய்ச்சல் கடிகாயம் குணமடைந்தாலும் உள் இளையங்கள் அழற்சியுற்று அழியும். இப்பகுதி நிணநீர்க் கணு பருத்து மென் மையடையும். காய்ச்சல் மூன்று நாட்களுக்கு 40° C ஆகவும் மேலும் மூன்று நாட்களில் நிறைய வியர்த்து காய்ச்சல் விடும். மீண்டும் காய்ச்சல் வந்து நெஞ்சிலும், கைகளிலும் ஊதா நிறத் தழும்புகள் ஏற்படும். ஹேவஹில் காய்ச்சலை உண்டு பண்ணும் கிருமிகள் எலியின் மூத்திரம் மூலம் பாலில் கலந்தே நோய்தொற்றுகின்றது.

வெயில்ஸ் நோய் (**Weils Disease**)

**Weils** நோய் ஒருதொற்றும் மஞ்சள்காமாளை ஆகும். காரணி எலிகளால் காவப்படும் பற்றீரியா உணவு, நீர் மற்றும் எலிகளால் அளையப்பட்ட பொருட்கள் மூலம் தொற்றுகின்றது. கப்பற்றுறை, சுரங்கம் ஆகியவற்றில் வேலைபார்ப்பவர்களில் அடிக்கடி ஏற்படும் குணங்குறிகளாக குளிர் காய்ச்சல், தலையிடி, தசை நோ, ஐந்தாம் நாள் காமாளை உண்டாகும் சதைத்தில் அல்புமின், செங் குருதிக் கலன்கள், பித்தச் சுரப்பு காணப்படும். காமாளை தோன்றாதவர்களில் மரண விகிதம் குறைவு. இந்நோயிற்கு லேப் ரோஸ் பைறோசிஸ் (**Leptopsirosis**) என்றும் பெயருண்டு. நோய்க் காரணி தொற்றுள்ள எலிகளின் சிறுநீரில் கழிக்கப்படும். மண் அல்லது நீர் மூலம் மனிதருக்குத் தொற்று ஏற்படுகின்றது 10% நோயாளிகளில் இறப்பு நேரிடும்.

லிம்போசைரிக் கோறியோ மெனிஞ்ஜயிரிஸ்

**Lympho cytic chorio, Meningitis virus** கிருமி வீட்டெலிகளுக்குத் தொற்றக் கூடியது வைரஸ் தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்கள் பிரசவிக்கும் குழந்தைகளுக்கு **Hydroccphalus** (மூளைக்குள்நீர்) ஏற்படும் கிருமிகள்எலிகளால்உமிழ்நீர் சிறுநீர் ஆகியவற்றில் கழிக்கப்படும். காற்றில் மிதக்கும் வைரஸ் கிருமி சுவாச மூலம் தொற்றை ஏற்படுத்தும்.

நாடாப்புழுத் தொற்று

**Hymenolepis diminuta** என்ற நாடாப்புழு எலிகளில் ஒட்டுண்ணிகளாக வளரும். இந்த நாடாப்புழுத் தொற்று மனிதருக்கும் பரவக்கூடியது. இத் தொற்றுஎலிகளில்எலித் தெள்ளுகள், வண்டுகள் மூலம் பரவுகின்றது. தொற்றுள்ள தெள்ளுகளை அல்லது வண்டுப் பூச்சிகளை உட்கொண்டவுடன் இந்நாடாப் புழுத் தொற்று ஏற்படுகின்றது.

மேலும் **Scrub typhus, Murine typhus, Rabies, Salmonella gastroentertts, Trichinosis** ஆகிய நோய்களும் எலிகளால் மனிதருக்குப் பரப்பப்படுகின்றன.

எலிகளைக் கட்டுப்படுத்தல்

எலிகள் இல்லாத இடமே இல்லை எனலாம். வீட்டில், வயல்களில், சேரிகளில், நகர்களில் வாழ்கின்றன. ஆகையால் மனிதரும் எலிகளும் தோளோடு தோளாக வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் அவை இப்போது நெருக்கடியை உண்டு பண்ணுகின்றன. எலிகளின் எண்ணிக்கை கூடியதுடன்எமக்கு எலிகளுடனான தொடர்பும், அவற்றால் காவப்படும் நோய்க் காரணியுடனான நெருக்கடும் சந்தேகத்திற்குரியனவாகின்றன.

எலிகளை ஒழிக்க

எலிப்பொறி, எலிப்பாசாணம் முதலியவற்றை உபயோகிக்கலாம். **Warfarrin** என்ற எலிப் பாசானத்தைக் கட்டிப் பொருளாக உணவுடன் கலந்தோ அல்லது நீரில் கரைத்தோ, எலிகளுக்கு வைக்கலாம்.

(எலிகள் **Warfarrin** போன்ற பாசாணங்களுக்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டுகின்றன. ஆகையால் **Calciferol** கலந்த **Warfarrin** ஐ உபயோகிப்பர்).

- களஞ்சிய அறைகளில் கந்தக ஈரொட்சைட் ($SO_2$)வாயுவைப் பிரயோகிக்கலாம்.
- வீடுகள் களஞ்சிய அறைகளை இயலுமான அளவு எலிகள் உட்புகாதவாறு அமைக்கலாம். ஆனாலும் எலிகள் துள்ளிப் பாய்ந்தோ அல்லது துளை கிண்டியோ உட்செல்லக் கூடும்.
- பூனை வளர்த்தல்உயிரினவியல் முறையில் எலிகளைக் கட்டுப்படுத்தும்.

நாம் எடுக்கும் எந்த முறையையும் வெல்ல எலிகளால் முடியும். அத்துடன் எலிகளின் கூடுதலான இனப் பெருக்க விகிதமும் சேர்ந்து மனிதரின் சுகாதாரத்திற்கு ஒரு சவாலாகவே அமைகின்றது.

## தினசரி தியானம்

### ஞானப்பிறவி

அன்றுநான் பிறந்திலேன்
பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும் என் நெஞ்சுளே

-திருமழிசை ஆழ்வார்

பரம்பொருளே, உன்னை நான் அறிந்து கொள்ளும் பொழுது பெருவாழ்வு என்னும் புதிய பிறவி எடுக்கிறேன்.

உடல்கள் பல எடுப்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. புதிய உடல் எடுத்திருப்பதைக் குறித்து மனிதன் மகிழ்ந்திருக்க வேண்டியதில்லை. ஞானம் உதயமாகும் பொழுது இறைவனது மகிமை உள்ளபடி தெரிகிறது. ஞானத்தில் பிறந்திருப்பவரே நல்வாழ்வு வாழ்கின்றனர். உள்ளும் புறமும் தெய்வ சாந்நித்தியத்தை உணர்பவரும் அவர்களேயாம்.

– ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## சிறுவர் அரங்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கோட்டப் பாடசாலைகளுக்கான சிறுவர் அரங்கப் போட்டி நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில்கலந்து கொள்ளும் பாடசாலைகளை காலை 8.30 மணிக்குசமுகமளிக்குமாறு நல்லூர்க்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் அறிவித்துள்ளார். (உ)

## யூனியன் கல்லூரிச் சமூகம் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்தவங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையை ஈடுசெய்யுமாறு மருத்துவர்கள்விடுத்த வேண்டுகோளையடுத்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் சென்று அண்மையில் இரத்ததானம் செய்தனர். (உ)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று ஆரம்பமான கல்வியியற் கண்காட்சியில் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம்

### யாழ் பொலிஸ் நிலையத்தில்

# தமிழ் தெரிந்த பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்த சட்டமூலமும், 16வது திருத்த சட்டமூலமும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நீதிமன்ற மொழி தமிழ் மொழியாக இருப்பதினால் பொலிஸார் தாக்கல் செய்யும் குற்றப் பத்திரம், அறிக்கைகள் யாவற்றையும் சகல நீதிமன்றங்களிலும் தமிழில் தாக்கல் செய்யக் கூடியதாக ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் தேர்ச்சி பெற்ற தமிழ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்று நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா, மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம், திருமதி இளங்கோவன் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி. எம். பிரேமரட்ண, காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் எஸ். ஜெயசேகரா மற்றும் யாழ் குடாவில் உள்ள 15 பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 21 பேர் கலந்து கொண்டனர்.

இந்த உயர் மட்டக் கலந்துரையாடலின் போது பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

பொது மக்களால் செய்யப்படும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும்:

வீதிகளில் துவிச்சக்கரவண்டிகளில் சமாந்திரமாகச் செல்பவர்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

விபத்துக்கள் இடம்பெறுவதற்கு முக்கிய காரணமாக இருக்கும் வாகனங்களில் மேலதிகமாக பிரயாணிகளை ஏற்றிச் செல்வது மோட்டார் சைக்கிளில் மூவர் செல்வது தடை செய்யப்பட வேண்டும் எனவும், வீதி ஒழுங்கு முறை பேணப்படவேண்டும் என்றும், இவற்றை முதற்கட்டமாக யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமுல்படுத்த வேண்டும் என்றும்,

வீதி ஒழுங்கு முறைகளை கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகளை கடைப்பிடிப்பது தொடர்பாக மாணவர்கள், மாணவிகளுக்கு பயிற்சி வழங்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ)

# புலிகள் மீதான தடையை அரசு நீக்கக் கூடாது

### பிரதமருக்கு ஜே.வி.பி செயலர் கடிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை எக்காரணம் கொண்டும் அரசு நீக்கக் கூடாது. அவர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பிய பின்னரே அவர்கள் மீதான தடைநீக்கம் பற்றி அரசு யோசிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் ரில்வின் சில்வா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிததிருப்பதாவது:-

சாமாதனப் பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு அப்பேச்சுவார்த்தையில் இதய சுத்தியுடன் கலந்து கொள்ளாத வரையில் புலிகள் மீதான தடைநீக்க விடயத்தில் அரசு அவசரப்படக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். (ம)

# பலம்பொருந்திய அமைப்பாகவே விடுதலைப் புலிகள் யாழ் வந்துள்ளனர்

### நீதித்துறைப் பொறுப்பாளர் பரா உரை

(ஊர்காவற்துறை)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பலம் பொருந்திய இயக்கமாகவே யாழ் குடாநாட்டுக்கு வந்துள்ளது. எமது சுதந்திரம், கௌரவம் எந்தவகையிலும் பாதிக்கப்பாடாத வகையிலேயே எமது போராட்ட வரலாறு சுட்டிக்காட்டுகிறது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதித்துறைப் பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தீவகம் சென்ற விடுதலைப்புலிகளுக்கு வேலணைத் துறையூர் மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தார்கள். அவ்வரவேற்பிற்கு பதிலளிக்கும் வகையிலேயே பரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வேலணைத்துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் புலிகளை வரவேற்று நடந்த கூட்டத்தில் பரா மேலும் பேசுகையில் கூறியதாவது

தமிழீழ விடுதலைப் புலிகளின் வலுவான, இறுக்கமான போராட்டத்தின் தன்மையினால் தென்னிலங்கை சிங்கள மக்கள் சமாதானத்தை விரும்பி, சமாதானக் கோஷமிட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு வாக்களித்தார்கள்.

பெரும்பான்மை மக்கள் விருப்பத்திற்கு அமைவாக அரசு எம்முடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளது. அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையினை நாம் எச்சந்தர்ப்பத்திலும் மீற மாட்டோம்.

இங்குள்ள மக்கள் பலதரப்பட்டவர்களாலும், பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்துள்ளனர். இந்நிலையில் அவர்கள் எத்தரத்தினராக இருந்தாலும் அவர்கள் இந்நாட்டின் தமிழ் மக்கள் என்ற வகையில் எல்லோரும் ஒன்றிணைந்து வாழவேண்டிய வழிவகைகளை மேற்கொள்வோம் என நீதிப்பொறுப்பாளர் பரா தெரிவித்தார். (ம-75-43)

# ஆட்டோ சாரதி தாக்கப்பட்டார்

(மந்திகை)

ஆட்டோ சாரதி ஒருவர் இனந் தெரியாதோரால் கூட்டிச் செல்லப்பட்டு மிக மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவம் நேற்று அதிகாலை ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் மோசமாகத் தாக்கப்பட்ட உடுப்பிட்டி இமையாணன் கிழக்கைச் சேர்ந்த ஆட்டோச் சாரதி சின்னவன் இந்திரன்(வயது-52) கைகள் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்று அதிகாலை நான்கு மணியளவில் பிரஸ்தாப ஆட்டோச் சாரதியின் வீட்டிற்குச் சென்ற இனந் தெரியாத நபர் ஒருவர் கொழும்பு செல்வதற்காக அவசரமாக யாழ்ப்பாணம் செல்லவேண்டியிருப்பதாக கூறி ஆட்டோவை வருமாறு அழைத்தார்.

இதனை நம்பி ஆட்டோச் சாரதி அவரை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வரும்போது ஆவரங்கால் பகுதியில் ஆட்டோவை நிறுத்தி மேலும் இருநபர்களை ஆட்டோவில பிரஸ்தாப நபர் ஏற்றியதாகவும் பின்னர் மூவரும் சேர்ந்து ஆட்டோச் சாரதியை கடுமையாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-23)

### 12 வருடங்களின்...

அஞ்சலி செலுத்தினர். அங்கு ஈகச்சுடர் ஏற்றி வைக்கப்பட்ட பின் வேலணைத்துறையூரில் மாபெரும் பொதுக்கூட்டம் இடம்பெற்றது இக் கூட்டத்திற்கு செம்மணன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட எம்.பி என்.கே.சிவாஜிலிங்கம், நீதிப்பொறுப்பாளர் பரா, யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி உட்படப் பலர் உரையாற்றினர். (வ-75)

### மணிக்கூட்டுக் கோபுர...

இது இவ்வாறு இருக்க அவ்வீதியில் மினசார சபையினால் போடப்பட்டிருந்த பழைய தூண்களை மின்சாரசபை ஊழியர்கள் அப்புறப்படுத்தினர். இன்று மணிக்கூட்டுக் கோபுர வீதிக்குத் தார் போடும் வேலைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### தமிழ்ச்செல்வனிடம்...

திருமலை தமிழீழத்தின் தலை நகராக இருப்பதனால் அங்கு தமிழ் பிரதிநிதித்துவத்தை கூட்டவேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### வலி. வடக்கு மக்கள்...

தொடர்ந்து பிரதேச செயலகத்தில் இருந்து லான்மாஸ்ரர் மற்றும் சைக்கிள்களில் பேரணி புறப்பட்டு யாழ் அரச செயலகம் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் ஆகியவற்றில் மகஜர் கையளிப்புடன் நிறைவு பெறுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த மாதம் 15ம் திகதி வலிவடக்கு மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி வலிவடக்கு பிரதேச செயலகம் முன்பாக 12 அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-12)

### இயந்திரப்படகை...

படைத்தளபதி விக்கிரமசிங்கா, காங்கேசன்துறை கடற்படைத்தளபதி, 512வது கட்டளைத்தளபதி, யாழ் அரச அதிபர் க.சண்முகநாதன், ரான் பொறியியலாளர் எஸ்.கிரிதரன், வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.நவரத்தினம், பொதுமுகாமையாளர் ஆர்.இராசாராம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் உட்பட சுமார் 40 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் கடற்றொழில் அமைச்சின் அடையாள அட்டைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்குவதெனவும், ஆழ்கடலில் மீன்பிடிக்கலாம் என்றும், பாரிய இயந்திரப்படகுகளைப் பாவிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

காக்கைதீவுக்கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது போல குருநகர், கொழும்புத்துறைக் கடல்களிலும் மீன்பிடிப்பதற்கு காலப் போக்கில் அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-2)

இந்தியாவிலிருந்து வருகைதரும்
அருட்திரு. அகஸ்ரின் முன்டக்கட் தலைமையில்
இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்
இன்று முதல் ஆரம்பமாகின்றன
18.06 - புதன்-மல்லாவி / 19.06 வியாழன் - முழங்காவில்
20.06 - வெள்ளி-கிளிநொச்சி / 21.06 சனி - முல்லைத்தீவு
23-06-ஞாயிறு இரவு
திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடு
புதுக்குடியிருப்பு
24.06-திங்கள் மாலை 4-8 வரை 25.06 செவ். காலை 8-12 வரை
குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகளுக்கு - யாழ் ஆயர் இல்லம்
25.06-செவ். மாலை 4-8 வரை - தும்பளை
26-06 புதன் இரவு
திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடு
யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானம்
உடல், உள ஆன்மீக விடுதலை பெற
நம்பிக்கையோடு வாருங்கள்.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
- இறை தியான குழுவினர்
(5457)

வன்னியில்
விற்பனை
ஆகின்றது.
லாலா சோப் எமது
தயாரிப்பான சன்சயின்
சோப்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான
நல்லெண்ணெய்
V.S.P.லஞ்ஒயில்
தயாரிப்பாளர்:
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[C/4243]

YOGI HOME SCIENCE ACADAMY
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
மனையியல் புதிய பிரிவு வகுப்புக்கள் 21.06.02 அன்று முதல் ஆரம்பமாக உள்ளது.
விசேட பயிற்சி நெறியாக முக ஒப்பனையும் நவீன தலை அலங்காரங்களும். (15 வகுப்புக்கள் மட்டும்)
❖ சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)
(5445)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.